## அரசாங்க அறிவித்தல்

# போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு

# தேசிய போக்குவரத்துக் கொள்கை வரைவு

## பொதுமக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல்

**பின்புலம்**

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் நிலைபேறாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் வினைத்திறன் மிக்கதும் சிக்கனமானதுமான போக்குவரத்து முறைமை இன்றியமையாததாகும். நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையிலான வலையமைப்பை ஏற்படுத்தல், போக்குவரத்துக்கான செலவையும் போக்குவரத்து நேரத்தையும் குறைப்பதன் மூலம் செயலாற்றத்தை மேம்படுத்தல், பல்வேறு உள்ளீடுகளும் பரந்த அளவிலான சந்தை வெளியீடுகளும் கிடைக்கும் வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் நம்பகத் தன்மையை அதிகரித்து உற்பத்தித் திறனை மேம்படுத்தல் போன்ற பல்வேறு விதங்களில் போக்குவரத்துத் துறை இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு போக்குவரத்துத் துறையின் பிரதான ஒழுங்கமைப்பு நிறுவனமாகும். அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், ஒட்டுமொத்த போக்குவரத்துத் துறையையும் ஒழுங்கமைத்து நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள் உள்ளன.

புகையிரதத் திணைக்களம் நாட்டின் ஒரேயொரு புகையிரத சேவை வழங்குனராகத் தொழிற்படுகின்றது. பேரூந்துப் போக்குவரத்து அரசியலமைப்பின் கீழ் பகிரப்பட்ட ஒரு விடயமாகும். எனினும், அரசுக்குச் சொந்தமான பேருந்து வண்டிகள் அமைச்சின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் (இ.போ.ச) தொழிற்படுத்தி ஒழுங்குபடுத்தப்படுகின்றது. தனியார் பேரூந்துத் துறையை ஒழுங்குபடுத்துதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தே.போ.ஆ) மற்றும் மாகாண போக்குவரத்து அதிகார சபைகள் (மா.போ.அ) ஆகிய இரண்டினதும் பொறுப்பாகும். அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ள தே.போ.ஆ. மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றது. மாகாணப் போக்குவரத்து

அதிகாரசபைகள் மாகாணப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றன. மாகாணப் போக்குவரத்து அதிகாரசபைகள் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளினால் தாபிக்கப்பட்டன. தே.போ.ஆ. பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை வழங்கும் வினைத்திறன் மிக்க பேரூந்துப் போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்துவதற்காக பிரயாணிகள் போக்குவரத்துப் பேரூந்துகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்கும் அத்தகைய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான ஒழுங்கமைப்புச் சட்டகங்களை வகுப்பதற்கும் பொறுப்பாக உள்ளது.

இன்று இலங்கையில் போக்குவரத்துத் துறையினால் அதிகரித்து வருகின்றதும் பல்வகைப்பட்டதுமான போக்குவரத்துத் தேவைக்கு பயனுறுதியான பதில் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதுள்ள அதேவேளை, சேவைகள் பொருளாதாரத்துக்கு பெரும் செலவில் வழங்கப்படுகின்றன. பலவீனமான நிறுவனங்கள், விவேகமான உபாயத்திட்டச் சட்டகம் இன்மை, மோசமான முதலீட்டுத் திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதில் அதிகாரப் போக்கு போன்றவை மோசமான போக்குவரத்துத் துறைச் செயலாற்றத்துக்கு பெரும்பாலும் காரணமாக அமைகின்றன.

மேலே சொல்லப்பட்ட காரணங்களால், 1991 நவம்பர் 27ஆம் திகதியும் 2009ஆம் ஆண்டிலும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தற்போதுள்ள போக்குவரத்துக் கொள்கைகளைத் திருத்துவதற்கு இலங்கைப் பாராளுமன்றத்தின் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு நிபுணத்துவ செயற்குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்த நிபுணத்துவ ஆணைக்குழு போக்குவரத்துத் துறையில் உள்ள சம்பந்தப்பட்ட பங்கீடுபாடு உடையோர், முகவராண்மைகள் மற்றும் நிபுணர்களைக் கொண்டுள்ளது.

செயற்குழு தேசிய போக்குவரத்துக் கொள்கை ஆவணதின் வரைவை ஏற்கனவே தயாரித்துள்ளது. தேசிய போக்குவரத்துக் கொள்கை ஆவணம் போக்குவரத்துச் சேவைகளின் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான முதலீடு மற்றும் அபிவிருத்தியின் கொள்கை இலக்குகள், கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைக் கோட்பாடுகளை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆதலால், ஆணைக்குழு வரைவு போக்குவரத்துக் கொள்கைக்கான கருத்துகளையும் ஆலோசனைகளையும் பொதுமக்கள், நிபுணர்கள், தொழில்வாண்மையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் தாபனங்களிடமிருந்து வரவேற்கின்றது.

பின்வரும் உத்தேச வரைவு போக்குவரத்துக் கொள்கை பற்றிய எழுத்திலான சமர்ப்பணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**கொள்கைக் கருத்துகள்**

இலங்கையில் தற்போதுள்ள போக்குவரத்து முறைமையில் கணிசமான மேம்பாடுகள் தேவைப்படுகின்றன. மிகையான நேரம், சக்தி மற்றும் வளங்களின் பயன்பாடு, சுற்றாடல் சீர்குலைவில் அதிகரித்துவரும் போக்கு, பாதுகாப்பு நியமங்கள் குறைவடைதல் ஆகியவை இதற்கு சான்றாக அமைகின்றன.

தற்போதுள்ள போக்குவரத்து முறைமைகளில் பயனுறுதியான ஒருங்கிணைப்பின்மை, பொதுமக்கள் போக்குவரத்து, துணைப் போக்குவரத்து (para transit) மற்றும் தனியார் வாகன தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தில் வினைத்திறனின்மை, போக்குவரத்துக் கேள்வி முகாமைத்துவ தலையீடுகள் போதாமை, போக்குவரத்து தொடர்பான உட்கட்டமைப்புகளில் ஆற்றல் வரையறை, பங்கீடுபாடு உடையவர்களின் ஆற்றலின்மை, ஒருங்கிணைக்கப்படாத காணிப்பயன்பாட்டு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாடுகளை ஊக்குவிப்பதற்கான கொள்கை வழிகாட்டல்கள் இல்லாமை ஆகியவை தற்போதைய நிலைமைக்கான பிரதான காரணிகளாகும்.

**குறிக்கோள்கள்**

இந்தக் கொள்கை இலங்கையில் போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திக்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது. பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது:

- போக்குவரத்து உட்கட்டமைப்புகளும் சேவைகளும் வினைத்திறன் மிக்கவையாக இருக்கவேண்டும் என்பதையும் அவை இலங்கையில் தேசிய, மாகாண மற்றும் கிராமிய மட்டங்களில் அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக இருக்கவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுதல்.
- உபாயத்திட்டக் குறிக்கோள்களையும் அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் மேம்படுத்துவதற்கு போக்குவரத்துத் துறையில் உள்ள பங்கீடுபாடு உடையவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- போக்குவரத்துத் துறையில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்கும் அபிவிருத்தி இலக்குகளில் உலகளாவிய போக்கை அடைவதற்கும் அவசியமான முதலீட்டு முன்னுரிமைகள் பற்றிய வழிகாட்டல்.
- போக்குவரத்துத் துறையில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சேவை முகாமைத்துவம் தொடர்பாக நீண்டகால தீர்மானங்களை மேற்கொள்வதில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குதல்.

**கொள்கைக் கோட்பாடுகள்**

- எளிதில் கிடைக்கக்கூடிய போக்குவரத்து முறைமை

  போக்குவரத்து முறைமைகள் பிரஜைகளினதும் வணிகங்களினதும் அடிப்படை போக்குவரத்துத் தேவைகளை ஈடுசெய்வதற்கும் புதிய தொழில்நுட்பங்களையும் தொடர்பான அபிவிருத்திகளையும் பயன்படுத்தி எல்லா போக்குவரத்து முறைமைகளும் ஒன்றுடன் ஒன்று இணையக்கூடியவாறு அவற்றை பயனுறுதியாகவும் வினைத்திறனுடனும் ஒருங்கிணைப்பதை மேம்படுத்துவதற்கும் வடிவமைக்கப்படுகின்றன. போக்குவரத்துச் சேவைகள் எல்லா பயன்படுத்துனர்களுக்கும் இலகுவாகக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பும்

  எல்லா போக்குவரத்துப் பாங்குகளும் வினைத்திறன்மிக்கதும் செலவைக் குறைக்கக்கூடியதுமான சக்திக் கொள்கைகளின் பால் வழிநடத்தப்படுதல் வேண்டும். போக்குவரத்துச் சேவைகள் அதிகுறைந்த சுற்றாடல் சீர்குலைவுகளுடன் நிலைபெறுதகு விதத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

- பாதுகாப்பையும் மற்றும் அவதானத்தை அதிகரித்தல்

  போக்குவரத்துச் சேவைகள் பாதுகாப்பானவையாகவும் சௌகரியமானவையாகவும் நம்பத்தகுந்தவையாகவும் இருத்தல். போக்குவரத்து உட்டகட்டமைப்புகளை வடிவமைப்பதில் பெண்கள், சிறுவர்கள், முதியோர் மற்றும் மாற்று ஆற்றல் உடையோருக்கு பாதுகாப்பான சுற்றாடலை வழங்குதல்.

- பொருளாதாரத்துக்கு சாதகமான பங்களிப்பை வழங்குதல்

  பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும், பிரயாணிகளினதும் பண்டங்களினதும் போக்குவரத்துக்கு தற்போதுள்ள மற்றும் எதிர்கால கேள்விகளை போதியளவில் ஈடுசெய்கின்ற வினைத்திறன் மிக்கதும் தரமானதுமான போக்குவரத்துச் சேவைகளை நியாயமான செலவில் மேம்படுத்தல். தனியார்துறை முதலீடுகளையும் அரச-தனியார் பங்குடைமைகளையும் உச்சப்படுத்துதல்.

- காணிப் பயன்பாட்டையும் போக்குவரத்துத் திட்டமிடலையும் ஒருங்கிணைத்தல்

  புதிய போக்குவரத்து சார்ந்த மற்றும் போக்குவரத்து சாராத தலையீடுகள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்பான உபாயங்களின் உதவியுடன் போக்குவரத்துத் தூரம் குறைக்கப்பட்டு மக்களின் ஜீவனோபாயங்கள், கல்வி மற்றும் ஏனைய சமூகத்

தேவைகளை அணுகக்கூடியவாறு காணிப் பயன்பாட்டு அபிவிருத்திகளையும் போக்குவரத்து முறைமைகளின் அபிவிருத்திகளையும் ஒருங்கிணைத்தல்.

**கொள்கை இலக்குகள்**

- நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கு மக்களினதும் பண்டங்களினதும் வினைத்திறன் மிக்க அசைவை மேம்படுத்தல்.
- எல்லோருக்கும் சமத்துவமாகக் கிடைப்பதை அனுமதிப்பதற்கு சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்தல்.
- சேதங்கள், காயங்கள் மற்றும் உயிர் இழப்புகளைக் குறைக்கக்கூடிய பாதுகாப்பான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.
- சுற்றாடலின் நிலைபெறு தன்மையைப் பாதுகாத்து ஆரோக்கியத்தை மேம்படுத்தல்.

**கொள்கை வழிகாட்டல்கள்**

- பொதுப் போக்குவரத்து சேவைகளின் தரத்தையும் நம்பகத் தன்மையையும் மேம்படுத்தி பொதுப் போக்குவரத்தின் பயன்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல். பாதுகாப்பானதும் சௌகரியமானதும் நம்பத்தகுந்த சேவையை வழங்கக்கூடியதும் பிரயாணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து இலகுவாக வழங்கக்கூடியதுமான பொதுப் போக்குவரத்து முறைமையை மேம்படுத்தல். தனியார் வாகன பாவனையாளர்களை பொதுப் போக்குவரத்திற்கு மாற்றுவதன் மூலம் பொதுப் போக்குவரத்துப் பாங்கினை அதிகரிக்கும் சேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்.
- பொதுப் போக்குவரத்து வலையமைப்பை விரிவாக்கம் செய்து சாத்தியமான பல்வேறு போக்குவரத்து முறமைகளுடன் ஒருங்கிணைத்து சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். நகரப் பிரதேசங்களில், ஏனைய போக்குவரத்து முறைமைகளுடன் தொடர்பையும் ஒருங்கிணைப்பையும் அதிகரிப்பதை உறுதிப்படுத்தல். கேள்வி வேறுபாடுகளுக்கு (உச்ச தேவைப்பாட்டு நேரம் – குறைவான தேவைப்பாட்டு நேரம்) அமைய துரித சீராக்கங்களை வழங்குதல் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். மாற்றங்களைக் குறைப்பதற்காக பொதுப் போக்குவரத்து வலையமைப்பை திட்டமிடல். ஒன்றுக்கொன்று இணையான சேவைகளுக்கு முன்னுரிமை அளித்து போட்டித்தன்மையான சேவைகளுக்கு அதைரியமளித்தல். கிராமியப் பிரதேசங்களில் பொதுப் போக்குவரத்தில் பண்டங்களைக் கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இடமளித்தல் வேண்டும்.
- பொதுப் போக்குவரத்துச் சேவைகள் கிடைத்தல் மற்றும் அவற்றின் ஒப்புரவை மேம்படுத்தி கட்டுப்படியானதாக ஆக்குதல். அணுகுதலை மேம்படுத்தி நிறுத்தும் இடங்களுக்கும் முனையங்களுக்குமான நடைதூரங்களைக் குறைத்தல். வயது, பால்நிலை மற்றும்

இயலுமை வேறுபாடின்றி வாகனங்கள் இலகுவில் அணுகக்கூடியவையாக இருத்தல் வேண்டும். கட்டணங்கள் கவர்ச்சிகரமானவையாவும் கட்டுப்படியானவையாகவும் இருப்பதுடன் அவை மாற்றங்களை அதைரியப்படுத்தலாகாது.

- துணைப் போக்குவரத்து சேவையை அங்கீகரித்து, பயண முடிவிடம் வரையிலான இணைப்புகளுக்கு வசதியளித்தல். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளின் உதவியுடன் கேள்வி குறைவான பிரதேசங்களுக்கும் பயண முடிவிடங்களுடன் இணைந்த சேவைகளை வழங்குவதற்கு துணைப் போக்குவரத்துச் சேவைகளுக்கு வசதியளித்தல்.

- பொருத்தமானவிடத்து, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, கரையோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்தி விரிவாக்கல். உள்நாட்டு நீர்வழிப் பாதைகள், கரையோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஆகியவற்றை இலகுவாக அணுகக்கூடிய அல்லது நெரிசலைக் குறைப்பதற்காக வீதிப் போக்குவரத்துக்கு மாறக்கூடிய ஆரம்ப இடங்களையும் முடிவிடங்களையும் அடையாளம் காணுதல்.

- பொருத்தமானவிடத்து மோட்டார்மயப்படுத்தப்படாத போக்குவரத்து (NMT) முறைமைகளை மேம்படுத்தி விரிவாக்கல். பொதுப் போக்குவரத்துக்கு அணுகுதலை வழங்கும் மோட்டார்மயப்படுத்தப்படாத பொதுப் போக்குவரத்து மேம்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல். பொருத்தமானவிடத்து காற்று-மழைக் காலநிலையிலிருந்து பாதுகாப்பளிக்கும் தொடர்புகளையும் பாதைக் கடவைகளையும் ஏற்பாடு செய்தல். மோட்டார்மயப்படுத்தப்படாத போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வலையமைப்பு பற்றிய தகவல்களை வழங்குதல்.

- பிரயாணிகளினதும் சரக்குகளினதும் அசைவுகளைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கும் பாதுகாப்பானதும் பயனுறுதியானதுமான போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துவதற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு. பொருத்தமானபோதெல்லாம், போக்குவரத்துத் தொழிற்பாடுகளுக்கும் தொடர்பாடலுக்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல். பங்கீடுபாடு உடையவர்களின் பங்குபற்றுதலுடன் போக்குவரத்து தொடர்பான தரவுத் தளத்தை உருவாக்கிப் பேணுதல்.

- பாதுகாப்பு முறைமைகளையும் தொடர்பான உட்கட்டமைப்புகளையும் அபிவிருத்தி செய்வதில் காலநிலை மற்றும் அனர்த்த எதிர்த்தாக்கத்தை உள்ளடக்குதல். ஏதேனும் மிக மோசமான தாக்கங்களை அடையாளம் காண்பதற்கு அனர்த்த தாக்க மதிப்பீட்டைப் பயன்படுத்துவதுடன் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் கட்டங்களில் தணிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்குதல். ஏதேனும் அவசரகால நிலைமைகளில் மாற்று வழிகளை அடையாளம் காணல். (வெளியேற்றுதல் அல்லது மாற்றுவழிகள்)

- பங்கீடுபாடு உடைய எல்லோரினதும் ஒருங்கிணைப்புடன் சிறந்த போக்குவரத்து மற்றும் கேள்வி முகாமைத்துவ பொறிமுறைகள் ஊடாக போக்குவரத்துச் செலவையும் பிரயாண நேரத்தையும் குறைத்தல். கேள்வி முகாமைத்துவத்துக்காக மோட்டார்மயப்படுத்தப்படாத தலையீடுகளைக் கவனத்தில் கொள்ளுதல். போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் போக்குவரத்துத் தொழிற்பாடுகளின் வினைத்தின்களை மேம்படுத்துவதற்காக நுண்மதிப் போக்குவரத்து முறைமைக் கருவிகளைப் பயன்படுத்தல்.

- சக்தி வினைத்திறன் மிக்கதும் குறைவாக மாசடையச் செய்கின்றதும் உயர் தொழிற்பாட்டு ஆயுளைக் கொண்டதுமான வாகனங்களின் பயன்பாட்டை மேம்படுத்துதல். எல்லா பிரயாணங்களுக்கும் / சேவைகளுக்கும் சக்தி வினைத்தினை பரிசீலித்தல். தனிப்பட்ட வாகனங்களின் புகை வெளியேற்றத்தைக் கண்காணித்தல். போக்குவரத்துக்காக புதுப்பிக்கத்தக்க சக்தியை மேம்படுத்தல். எல்லா போக்குவரத்துத் தலையீடுகளிலும் புகை வெளியேற்ற மட்டங்களையும் எரிபொருள் வினைத்திறன்களையும் மதிப்பிடல்.

- சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் சிறந்த முறையில் இணங்கி ஒழுகுவதற்காக போக்குவரத்து விதிகளை போதிய அளவிலும் பயனுறுதியாகவும் வலுவூட்டுதலை உறுதிப்படுத்தல். வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்காக சான்று அடிப்படையிலான வலுவூட்டல் உபாயங்களைப் பயன்படுத்தல்.

- சிறுவர்கள், பெண்கள், நோயாளிகள், மாற்று ஆற்றல் உள்ளவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகிய எல்லோரினதும் போக்குவரத்துத் தேவைகள் போதிய அளவில் நிவர்த்திக்கப்படுவதை உறுதிப்படுத்தல். பயனுறுதியான விலையிடல் முறைமைகளை தாபித்து இலக்குப் பிரதேசங்களுக்கான / குழுக்களுக்கான ஏதேனும் மானியத் தேவைகளை அடையாளம் காணல்.

- விபத்துகள், காயங்கள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைப்பதற்காக போக்குவரத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல். உட்டகட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் தொழிற்பாடுகளுக்கான பாதுகாப்புப் பரிசோதனைகளை மேம்படுத்தல். முடியுமானவரை விபத்துகள் அதிகம் இடம்பெறக்கூடிய இடங்கள், காயத்தின் தன்மைகள் மற்றும் சேதத்தின் பெறுமதி ஆகியவற்றுடன் முழுமையானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான விபத்துத் தரவுத் தளத்தைப் பேணுதல்.

- வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவை வழங்கலை அடைவதற்காக திறன்கள் அபிவிருத்திக்கான ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு வசதியளித்தல். தற்போதைய திறன்கள் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் கண்டு பங்கீடுபாடுடைய எல்லோருக்கும் பயிற்சி வசதிகளை அளித்தல்.

- மனித வள அபிவிருத்தி மற்றும் நவீன கருவிகளையும் உபகரணங்களையும் வழங்குவதன் ஊடாக போக்குவரத்துத் துறையினதும் முகாமைத்துவத்தினதும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக நிறுவன ரீதியான ஆற்றலை விருத்தி செய்தல்.
- போக்குவரத்துக்கான கேள்வியை குறைக்கக்கூடியவாறு அல்லது பிரயாண தூரங்களைக் குறைக்கக்கூடியவாறு பொருத்தமான இடம்சார் சமநிலைக்காக காணிப் பயன்பாட்டையும் போக்குவரத்துத் திட்டமிடலையும் ஒருங்கிணைத்தல்.
- போக்குவரத்துச் செயற்பாடுகளில் தனியார் துறையின் ஈடுபாட்டை ஊக்குவித்து வசதியளித்தல். போக்குவரத்து முறைமைகள் அபிவிருத்தியிலும் சேவை வழங்குவதிலும் தனியார் துறை முதலீடுகளையும் அரச-தனியார் பங்குடைமைகளையும் உச்சப்படுத்துதல்.
- போக்குவரத்துத் துறை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் தகவல்களைப் பரப்புதலையும் விரிவாக்குதல்.

**நடைமுறைப்படுத்தல்**

**i. உபாயத்திட்டங்கள் –**

போக்குவரத்துக்கான ஒட்டுமொத்தத் தேவையையும் கேள்வியையும் குறைத்தல்; அதிக புத்தாக்க அணுகுமுறைகள் மற்றும் சிறந்த வடிவமைப்பு முறைமைகளுடன் நிலைபெறுதகு போக்குவரத்துப் பாங்குகளுக்கு - குறிப்பாக நடத்தல், துவிச்சக்கர வண்டியில் செல்லுதல் மற்றும் பொதுப் போக்குவரத்து - மாறுவதற்கு ஊக்கமளித்தல், வினைத்திறன் மிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், கொள்ளளவு மற்றும் சுமை ஏற்றும் மட்டங்கள் ஆகியவற்றை உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் வினைத்திறனை மேம்படுத்தல், முதல் மூன்று முன்னுரிமைகளும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சுற்றாடல் வரையறைகள் விஞ்சாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆற்றலை அதிகரித்தல்.

**ii. பொறுப்பு**

தேசிய போக்குவரத்துக் கொள்கை மற்றும் பிற தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை வழிகாட்டல்களை அடைவதற்காக நடைமுறைப்படுத்தல் உபாயங்கள், கருத்திட்ட நிகழ்ச்சிகள், செயலாற்ற குறிகாட்டிகளை அடையாளம் காணல் மற்றும் இலக்குகளைத் தாபித்தல் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பங்கீடுபாடு உடைய நிறுவனமும் பொறுப்புவாய்ந்ததாகும். தேசிய போக்குவரத்து கொள்கைக்கு அமைவாக உபாயத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை ஒரு தேசிய ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு செய்யும்.

iii **கண்காணித்தலும் மதிப்பிடலும்**

எல்லா கருத்திட்டங்களும், நிகழ்ச்சிகளும் தொழிற்பாடுகளும் தலையீடுகளும் முறைமையாகக் கண்காணிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் மதிப்பிடப்படுதல் வேண்டும். கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக்காகத் தேவையான தகவல்களைச் சேகரித்துப் பேணுவதற்கு பங்கீடுபாடு உடைய நிறுவனங்கள் கூட்டாகவும் தனித்தும் பொறுப்புவாய்ந்தவையாகும்.

**தேவைப்படின் வரைவு போக்குவரத்து கொள்கை ஆவணத்தை பின்வரும் இணையதளங்களிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். www.transport.gov.lk/ww.ntc.gov.lk**

எழுத்திலான சமர்ப்பித்தல்கள் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டவாறு தபாலில் அனுப்பிவைக்கபடலாம் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படலாம். சமர்ப்பித்தல்கள் 2018 பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலமும் அனுப்பிவைக்கப்படலாம்.

மேலுறையின் / முகப்புப் பக்கத்தின் இடது பக்க மேல் மூலையில் **“தேசிய போக்குவரத்துக் கொள்கையை இற்றைப்படுத்துவதற்கான முன்மொழிவுகள்”** என குறிப்பிடவும்.

**தலைவர்,**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,**
**இல. 241, பார்க் வீதி,**
**கொழும்பு – 05.**

**செயலாளர்,**
**போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு**
**7ஆம் மாடி, செத்சிறிபாய - கட்டம் 2,**
**பத்தரமுல்ல**

**மின்னஞ்சல்:** chairman@ntc.gov.lk / info@ntc.gov.lk

**தொலைநகல்: 011 2503725 / 011 2058138**

**மின்னஞ்சல்:** mintransport@sltnet.lk / **secmintransport@gmail.com**

**தொலைநகல்: 011 2865093 / 011 2187224**

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு